**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 975 இல்லவாசிகள் – காலணிகள் வாங்கி வழங்கும் திட்டம் – 2016–2017ஆம் நிதியாண்டு – திட்டத்தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண்: 24** **நாள் 11.08.2016**

**துன்முகி–ஆடி 27,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண் 49, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 23.10.2015.

2 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 515/மஇ.நிர்.(3)/2016, நாள் 14.06.2016.

----------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு MCR காலணிகள் வாங்கி வழங்கும் திட்டத்தினை, 2015–2016ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ஒரு ஜோடி காலணியின் விலை ரூ.400/– வீதம் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1049 இல்லவாசிகளுக்கு MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.4,19,600/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2016–17ஆம் நிதியாண்டில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 975 இல்லவாசிகளுக்கு, MCR காலணிகள் வாங்கி வழங்கிட, 3 நிறுவனங்களிடமிருந்து பெற்ற விலைப்புள்ளிகளின் படி, 1 ஜோடி காலணி ரூ.390/– என்ற விலையில், குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள “DIGNI FEET - MCR Footwear Production Centre” என்ற நிறுவனத்திடமிருந்து MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.3,80,250/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளின் நலனை கருத்தில் கொண்டு, 2016–2017ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை தொடர, தொடராணையும், இச்செலவினத்திற்கென ஒரு ஜோடி காலணியின் விலை ரூ.390/– வீதம் 975 இல்லவாசிகளுக்கு MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.3,80,250/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

[த.பி.பா.]

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235–சமூக பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர் இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – I–திட்டத்தில் சேராதது – AI–தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 24–பொருள்களும் வழங்கலும். (து.தொ.கு.2235 02 104 AI 2405).**

5. மேற்கண்ட செலவினத்தை ஒப்பந்தப் புள்ளி நடைமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரமளிப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 38028/நிதி(சந)/2016, நாள் 03.08.2016–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அரசு மறுவாழ்வு இல்லங்கள்,
விண்ணப்பள்ளி / பரனூர் / உளுந்தூர்பேட்டை /
செல்லியம்பட்டி / மல்லவாடி / தேவியாக்குறிச்சி /
மணையேறிப்பட்டி / யா.புதுப்பட்டி / பர்கூர் / புதுக்கோட்டை.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**<u>நகல்:</u>**

நிதி (ச.ந)த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்